11.09.2025. O.S.No.88 of 2024 P.W.2 - சந்தோஷ்குமார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை**

தீனதயாளனை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர் என் நண்பர். கண்ணனை எனக்கு தெரியாது என்றால் பார்த்திருக்கிறேன். அவருக்கும் எனக்கும் எந்த பழக்கமும் இல்லை. கண்ணனின் விலாசம் என்ன என்றால் ஞாபகமில்லை. பாண்டு எழுதும்போது நான் அங்கு இல்லை என்றால் பாண்டு எழுதிக்கொண்டு வந்தார்கள். யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. பாண்டு வாங்கி படித்து பார்த்தேன். ரூபாய் 10 லட்சம் பணம் கொடுத்த மாதிரி எழுதியிருந்தார்கள். பணம் கொடுத்ததை நான் பார்க்கவில்லை என்றால் பணம் கொடுத்தபோது நான் அங்குதான் இருந்தேன். பணம் எங்கு வைத்து கொடுத்தார்கள் என்றால் தீனதயாளனின் டைல்ஸ் கடையில் வைத்து கொடுத்தார்கள். அன்று வேலை நாளா என்றால் அன்று குடியாத்தம் கங்கை அம்மன் திருவிழா. அன்று விடுமுறை என்றும், கடைகள் திறந்து வைக்கக்கூடாது என்றால் அன்று கடை திறந்திருந்தது.

புரோநோட்டை படித்து பார்த்ததாக சொல்லும் நான் அதில் குறிப்பிட்டுள்ள கண்ணனின் விலாசம் என்ன என்றால் நினைவில்லை. பாண்டை எங்கு பார்த்தேன் என்றால் தீனதயாளன் பணத்தை கண்ணனுக்கு கொடுத்தார். பணம் எண்ணி முடித்த பின்னர் பாண்டு கொடுத்தார்கள், கண்ணன் கையொப்பம் போட்டார் அதன் பின்னர் என்னிடம் கொடுத்தார்கள் நான் கையொப்பம் போட்டேன்.

வேறு யார் சாட்சி கையொப்பம் போட்டது என்றால் கண்ணனுடன் வந்த ஒருவர் கையொப்பம் போட்டார். தீனதயாளனின் தகப்பனார் பெயர் முனுசாமியும் அப்போது உடன் இருந்தார். ரூபாய் 10 லட்சம் இருந்ததா என்று நான் வாங்கி எண்ணி பார்த்தேனா என்றால் நான் எண்ணி பார்க்கவில்லை கண்ணன்தான் எண்ணி பார்த்தார். எத்தனை கட்டு கொடுத்தார்கள் என்றால் 500 ரூபாய் நோட்டுக்கள் 20 கட்டுக்கள் கொடுத்தார். தீனதயாளனுக்கு ரூபாய் 10 லட்சம் எங்கிருந்து அந்த பணம் வந்தது என்று கேட்டேனா என்றால் நான் கேட்கவில்லை அவர் சொல்லவில்லை.

முனுசாமி என்பவர் சர்வேயராக இருந்து ஓய்வு பெற்றவர். கையெழுத்து போட்டு கொடுத்ததாக சொல்லும் பாண்டை மறுபடி பார்த்தேனா என்றால் அன்று பார்த்ததுதான் அதன் பின்னர் பார்க்கவில்லை. அந்த பாண்டைதான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்களா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த பாண்டில் கண்ணன் எத்தனை கையெழுத்து போட்டார் என்றால் இரண்டு கையொப்பம் போட்டார். ஸ்டேம்ப் மீது ஒன்று கீழே ஒன்று போட்டார். அவர் கையெழுத்து போட்டபோது ஸ்டேம்ப் ஒட்டப்பட்டிருந்ததா என்றால் ஆம் ஒட்டப்பட்டிருந்தது.

இரண்டு கையொப்பங்களையும் கண்ணன் தெளிவாக போட்டாரா என்றால் ஆமாம். தற்போது சாட்சி சொல்ல வரும்போது தீனதயாளன்தான் என்னை அழைத்து வந்தார் என்றால் ஆமாம். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கண்ணன் ஒரு பதில் அறிவிப்பு அனுப்பிய விவரம் எனக்கு தெரியாது.

கண்ணன் அன்றைய தேதியில் பணம் வாங்கவில்லை என்றும், அவர் கையொப்பமும் போடவில்லை என்றும், வாதி என் நண்பர் என்பதால் அவருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் என் சாட்சியம் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2025.09.11 17:33:10 +0530